கும்பகோணத்தில் 1992 பிப்ரவரியில் நடைபெறவிருக்கும் மகாமகம் திருவிழாவையொட்டி, சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூபாய் 40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 50—நகராட்சி நிருவாகம்" மற்றும் "மானியக்கோரிக்கை 62—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பனவற்றின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

நலிந்த 6 கூட்டுறவு நூற்பாலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் உட்பட, 12 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்துவதற்காக அரசு ரூபாய் 7 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.5 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக்கோரிக்கை 54.—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு" என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து, நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்களைக் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி).

வணக்கம்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1991-92, வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்.

முற்பகல் 11.20.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991-92 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது

வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவை களை பேரவையின் 190 ஆவது விதிக்கிணங்க 3—10—1991, வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1991-92 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை 4—10—1991 அன்று பேரவையில் விவாதத்திற்கும் வாக்கெடுப் பிற்கும் எடுத்துக் கொள்ளப்படும்.

8. மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை, 1991-92 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1990-91 (விவாதம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1991-92 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை மற்றும் 1990-91 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ஆகியவற்றை இம் மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென முன்மொழிகின்றேன். நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக நூல் வடிவமாகவே மன்றத்தில் வைத்திருக்கின்றேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை சபைக் குறிப்பில் ஏற்றிட அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள் கிறேன். *வாரியத்தின் செயல்முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் மின்சார வாரியமும் கருத்தில் கொள்ளும். மின்சார வாரியத்தின் பணியினை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களது கருத்தினை கூறி விடுமாறு நான் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர் களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அளிக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதிலுரையைத் தெரிவிக்கின்றேன் என்பதையும் இம்மாமன்றத் திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

---

*558–570 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.